புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5

16-31 ஜனவரி '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# ஈழமக்களின் உரிமைப்போர் தொடரவேண்டும்!

ஈழத்தில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்கிற முழுமையான, தெளிவான விவரம் யாருக்குமே தெரியவில்லை. இந்திய, இலங்கை உளவுப்படைகளுக்கோ, போரில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் தேசிய இராணுவத்துக்கோ, அவற்றுக்குத் தலைமை ஏற்றிருக்கும் 'ஈழப் போராளி' அமைப்புகளுக்குமோ கூட தெரியாது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் படிப்படியாக வெளியேறும் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான போர் நடக்கிறது என்று மட்டும் தெரிகிறது. சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய இராணுவத்துக்கும் இலங்கை சிங்கள இராணுவத்துக்கும் இடையிலான போர். யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்கள் தவிர இந்திய இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான போரில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஈழப் போர் இப்போது மூன்றாவது கட்டத்தை அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். சிங்கள இராணுவத்தினருக்கு எதிரான போர்; இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிரான போர் - ஆகிய முதலிரு கட்டங்களைவிட இப்போது இந்தியக் கைகூலியான, துரோகிகளின் தமிழ் தேசிய இராணுவத்துக்கு எதிரான போரில் பெரும் எண்ணிக்கையிலான ஈழத்தமிழ் இளைஞர்கள் பலியாகின்றனர். ஒருநாளைக்கு 50, 60 இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர்; அதே அளவினர் எதிரெதிர் தரப்பினர்களால் கைது செய்து கடத்தப்படுகின்றனர். இத்தனைக்கும் இவர்களில் பெரும்பான்மையினர் தமது சுய முடிவின் அடிப்படையில் இந்தப் போரில் இறங்கியவர்கள் அல்ல. ஈழத்துரோகிகளாலும், இந்திய இராணுவத்தாலும் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டு, சீருடையும் ஆயுதங்களும் திணிக்கப்பட்டு போர் முனையிலே ஈழத்துரோகப் படையின் மனிதக் கவசமாக நிறுத்தப்படும் பள்ளிச் சிறுவர்கள்.

கடைசியாக, யாழ், திருகோணமலை நகரங்களை விட்டு இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு அவற்றைக் கைப்பற்ற நடக்கும் போரில் இதுவரை காணாத அளவு இரத்த ஆறு ஓடும் என்றே அனைவரும் கருதுகின்றனர். ஈழமக்களின் துயரத்தை எண்ணும்போது நெஞ்சு பதைக்கிறது. இன்றைய தலைமுறை மட்டுமல்ல; எதிர்கால இளைய தலைமுறையும் அழிந்து கொண்டிருக்கிறது. இந்தப் பேரிழப்புகளுக்கான முழுப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் ஈழத்துரோக அமைப்புகளும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரும், அதன் இந்திய எஜமானர்களும், அடிவருடிகளும் தாம்.

எவ்வாறாயினும், இன்னும் சில மாதங்களில் ஈழத்தைத் தமது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிடுவார்கள், விடுதலைப்புலிகள். இன்னும் சில ஆண்டுகளுக்காவது ஈழமக்களின் விதியைத் தீர்மானிக்கும் சக்தியாக அவர்கள் இருப்பார்கள். எனவே இரண்டு கேள்விகள் ஈழமக்களின் மனதிலே பெரிதாக எழுந்து நிற்கின்றன. இந்திய, இலங்கை அரசுகளுடன் விடுதலைப் புலிகள் இப்போது நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் - பேரத்தில் என்ன முடிவு செய்யப் போகிறார்கள்? விடுதலைப் புலிகள் தமது கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடங்கற்றுக் கொண்டு எந்த அளவு ஜனநாயகபூர்வமாக நடந்துக் கொள்ளப்போகிறார்கள்?

பாசிச ராஜீவ் கும்பலின் இலங்கை கொள்கையை இதுவரை சாடிவந்த தேசிய முன்னணி ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டிருந்தபோதும், அண்டைநாடுகளுடனான உறவைச் சீரமைக்கப் போவதாகக் கூறிக் கொண்ட போதிலும் தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கப் பேராசையை இந்தியா கைவிடவில்லை. இன்னும் இந்தியப் படை விலக்கத்தைத் தாமதப்படுத்தி, பேரங்கள் நடத்திக் கொண்டிருப்பது இதையே காட்டுகிறது. இருந்தபோதும், இராணுவ ரீதியில் ஈழத்தில் ஏற்பட்டுள்ள தோல்வி மீண்டும் நேரடியான அதன் இராணுவத் தலையீட்டுக்கான துணிவைத் தற்காலிகமாகவேனும் கைவிடச் செய்யும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் எதிராக விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஜே.வி.பி.யை அடக்கி ஒடுக்குவதில் இலங்கை அரசும் - இராணுவமும் பெற்றுள்ள வெற்றி விடுதலைப் புலிகளுடனான பேரத்தில் அதற்கு பலமளிப்பதாக உள்ளது. இந்நிலையில் புலிகளை நிராயுத பாணியாக்காமலேயே, அதன் ஆயுத பலத்தை அங்கீகரித்தே ஈழத்துக்கு மாகாண சுயாட்சியுடன் கூடிய அதிகாரத்தை அளிக்க இலங்கை அரசு முன்வரலாம். இதை ஏற்பது, ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுத்தருவதுதான். அநேகமாகப் புலிகளும் அதற்குத் தயாராய் இருப்பதாகவே தெரிகிறது.

இந்திய உளவுத் துறையுடனும் - அரசுடனும் பேரங்கள் நடத்தி அவை ஈழவிவகாரத்தில் தலையிட இடமளித்தது; இன வெறியுடன் சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்தது; ஈழத்தின் ஜனநாயகம் - சுதந்திரத்துக்குப் போராடிய சகபோராளிகளையும் தடைசெய்து, கொன்றது - ஆகிய தவறுகளை கடந்த காலத்தில் புலிகள் செய்து வந்தள்ளனர். இவற்றைத் தவறுகள் என்று இதுவரை அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஈழத்துரோகிகளுக்கு எதிரான புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை தவறெனக் கருதாத அதே சமயம் மற்ற பிற ஜனநாயகப் போராளிகளைப் புலிகள் ஒடுக்குவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது, விடுதலைப் புலிகள் பலகட்சி ஜனநாயக அமைப்பு முறையை இப்போது ஏற்குமாறு மாறி விட்டதாகக் கூறுகிறார்கள். இருந்தாலும் ஆயுத பலங்கொண்டு பாசிச முறையிலே தீர்த்துக் கொள்வது என்ற அணுகுமுறையையே சகபோராளிகள், மக்கள் மத்தியிலான முரண்பாடுகளுக்கும் அவர்கள் தீர்வாக வைத்து வந்திருக்கிறார்கள். எனவே எவ்வளவு துயரங்கள், இழப்புகள் நேரினும் ஜனநாயகம், குடியுரிமை உட்பட சகல அரசியல் உரிமைக்குமான மக்கள் திரள் அமைப்புகளையும், இயக்கங்களையும் கட்டியமைப்பது ஈழத்தமிழ் மக்களின் உடனடிக் கடமையாகிறது. இல்லையெனில் இவ்வளவும் காலமும் அவர்கள் சிந்திய இரத்தம் வீணாகும். நீண்ட இருண்ட எதிர்காலத்தையே காண முடியும்.